1972 நவம்பர் 13]

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) & (இ) கோவை மாவட்ட தலைமை மருத்துவமனையை ஈரோடுக்கு மாற்ற அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் விரைவில் செயலாக்கப்படும்.

Dispensary in Seithur

* 276 *Q*.—THIRU R. KRISHNASWAMY NAIDU: Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether the Town Panchayat of Seithur has requested the Government to upgrade the dispensary in Seithur into a hospital and has come forward to offer the necessary financial assistance and the site therefor;

(*b*) if so, the details thereof; and

(*c*) the decision taken by the Government thereon?

சேத்தூரிலுள்ள மருந்தகம்

திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு : மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இராமநாதபுரம் ஜில்லா சேத்தூரில் உள்ள மருந் தகத்தை மருத்துவமனையாக மாற்றும்படியும், அதற்கு இடமும் நிதி உதவியும் அளிப்பதாயும் சேத்தூர் நகர பஞ்சாயத்து கோரி யுள்ளதா ?

(இ) ஆமெனில், அதன் விவரமென்ன ?

(உ) அதன்பேரில் அரசு எடுத்த முடிவென்ன ?

மாண்புமிகு திரு க. அன்பழகன் : (அ) ஆம்.

(இ) & (உ) இவ்வாண்டு இம்மருந்தகத்தை அரசு ஏற்க வில்லை.

திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு : தலைவரவர்களே, அரசு இந்த ஆண்டு ஏற்கவில்லையானாலும், அடுத்த ஆண்டு இதை மருத்துவ மனையாக அமைப்பதற்கான திட்டம் அரசாங்கத்தின் கவனத்தில் இருக்கிறதாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு க. அன்பழகன் : தலைவரவர்களே, இந்த மருத்துவ மனையைப் போல ஏறத்தாழ 400, 450 மருந்தகங்களை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று தமிழ்நாடு முழுவதுமுள்ள பேரூராட்சி மன்றங்களும், ஒன்றியங்களும் வேண்டுகோள் விடுத்திருக்கிறார்கள். ஒரு மருந்தகத்தை மருத்துவமனையாக ஆக்குவதற்கு 50 ஆயிரம், 60 ஆயிரம், 70 ஆயிரம் ரூபாய் என்று செலவாகும். அதற்கு அண்மையில் வேறு பெரிய மருத்துவ மனை இல்லாவிட்டால், அப்படிப்பட்ட இடங்களில் மருந்தகங்களை மருத்துவ மனைகளாக மாற்றியிருக்கிறோம். இந்த ஆண்டு 45 மருந்தகங்களை மருத்துவமனைகளாக மாற்றியிருக்கிறோம். ஒவ்வொரு ஆண்டும் சற்றுத் தொலைவில் வேறு மருத்துவ வசதி இல்லாது உள்ள மருந்தகங்களை மருத்துவமனைகளாக மாற்றியமைப்பது என்ற ஒரு அடிப்படையில் செய்து வருகிறோம். எந்த ஆண்டு இந்த அடிப்படையில் அந்த மருந்தகம் வருகிறதோ அப்போது எடுத்துக் கொள்ளப்படும்.

திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு : தலைவரவர்களே, சேத்தூரில் நகரப் பஞ்சாயத்து இருக்கிறது. அது சுற்றேறத்தாழ 15 ஆயிரம் ஜனத்தொகை உள்ள நகரப் பஞ்சாயத்து. அதைச் சுற்றிலுமுள்ள கிராமங்களில் உள்ளவர்கள் அங்கே வருவார்கள். அவ்வளவு ஜன நெருக்கம் உள்ள பிரதேசம். அண்மையில் சில மைல்கள் தூரத்தில் மருத்துவ மனை இருந்தாலும், அந்தப் பகுதியை உத்தேசித்து, ஜன நெருக்கம் போன்ற விஷயங்களை உத்தேசித்து, சேத்தூரில் பஞ்சாயத்து கோரியுள்ளபடி, அரசு அதை மருத்துவமனையாக்க முன் வருமாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, முறையாகப் பரிசிலித்து, கூடிய விரைவில் நடவடிக்கை எடுத்துக் கொள்ள முயற்சி எடுக்கப்படும்.

Housing Scheme for the repatriates in Madras City

* 277 Q.—THIRU V. ISVARMURTI: Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state—

(*a*) whether any housing scheme is to be implemented for the repatriates in Madras City with Central Government aid; and

(*b*) if so, the details thereof?